ஞாலகுருவின் படைப்புக்கள்

# அருட்போர் நாயகர்களுக்கான தவபூசை முறை



ஆயிரமாயிரம் கோயில்களும், அவற்றில் ஆறுகாலப் பூசைகளும், ஆண்டு முழுவதும் விழாக்களும் நிகழ்ந்தும் கூட ஆயிரக்கணக்கான கல் தொலைவு கடந்து வந்து அன்னிய வேதங்களும், மதங்களும், அவை சார்ந்த கடவுள்களும் இங்கு ஆட்சி புரிய நேரிட்டது ஏன்? எதற்கு? எவ்வாறு? எப்படி?

அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,125 வைகாசி மாதம்

இந்து இலக்கியக் கழக வெளியீடு

43,73,125ஆம் ஆண்டின் **வைகாசி மாத** வெளியீடு.

தலைப்பு:- **"அருட்போர் நாயகர்களுக்கான தவபூசை முறை"**

# உள்ளுறை

1. **"அருட்போரில் நாயகர்களாகத் தயாராக விரும்புவோர் செய்ய வேண்டிய தவபூசை முறை"** - சிறுமுகைச் சித்தரடியான் மூலம் அனைத்து அடியான்களுக்கும் குருதேவர் விடுத்த தவபூசை முறை விளக்க அஞ்சல்.
2. **"குருதேவருடன் இணைந்து செயல்படுவதற்கான கட்டணம்"** - மதுரையிலிருந்து புதிதாக அஞ்சல் எழுதிய அறிமுகத்தார் கேட்ட கேள்விக்கு விடையாக குருதேவர் வழங்கிய கருத்துரை அஞ்சல்.
3. **"அருளாட்சிக்காக அருட்போர் பணி புரிவோர்கள்"** - நெல்லையைச் சேர்ந்த சித்தரடியார் அவர்களுக்கு அருளாட்சிக்காக உழைப்பது பற்றி விளக்கம் தந்து குருதேவர் விடுத்த மடல்.
4. **"கடவுள்களைப் பற்றிக் கூறுகின்ற ஒரே மதம் இந்துமதமே!"** - ஈரோட்டைச் சேர்ந்த சித்தரடியார் ஒருவருக்கு பதினெண்சித்தர்களுடைய இந்துமதத்தைப் பற்றி விளக்கம் தந்து குருதேவர் வழங்கிய அஞ்சல் வடிவக் கட்டுரை.
5. **"மாயோன் இந்து வேதம் - முதல் காண்டம் இருக்கு வேதம்"** - குருதேவர் வழங்கி அருளிய இந்து வேதப் பகுதி.

# அருட்போரில் நாயகர்களாகத் தயாராக விரும்புவோர் செய்ய வேண்டிய தவபூசை முறை

ஓம்

குருவே துணை

அம்பத்தூர்,
22-6-92.

அனுப்புதல்:
தலைவர்,
குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
சென்னை - 53.

பெறுதல்:
அருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானம்
இர.இராமசாமி,
இ.ம.இ., இ.மு.க. கோவை மாவட்ட நிருவாகக் குழு தலைவர்,
6/447, திருவள்ளுவர் நகர், சிறுமுகை P.O.,
கோவை District.

## செயல்நலம் பாராட்டுத் திருவோலை

1) தங்களுக்கும், தங்களுடைய திருக்குடும்பத்தாருக்கும் எல்லாவகையான நன்மைகளும் உண்டாகுமாறு குருபீடம் வாழ்த்துகிறது.

2) தாங்கள் ஆரம்பக் காலத்திலிருந்து அளப்பரிய குருபத்தியோடும், ஆழமான கொள்கைப் பிடிப்போடும் தொடர்ந்து கடலலை போல்

செயல்பட்டு வருவதை எண்ணி மகிழ்ந்து குவலய குருபீடம், குருமகாசன்னிதானம் வாழ்த்துகிறது, பாராட்டுகிறது.

3) ஆங்கில ஆண்டுக் கணக்குப்படி 16.5.92உம், 14.6.92உம் இரண்டு முழுநிலவுகள் (பௌர்ணமி) இந்த 43,73,093 ஆக்குரோச ஆண்டு வைகாசித் திங்களில் 3ஆம் நாளிலும், 32ஆம் நாளிலும் என்று ஒரே திங்களுக்குள் (மாதத்திற்குள்) இரண்டு முழுநிலவுப் பருவபூசைகள்; அதுவும் ஞானம் வழங்கு பருவபூசைகள் நிகழ்ந்து விட்டன. இவையே அருட்போருக்குரிய ஆயத்தப் பணிகள் ஆரம்பமாகி விட்டன என்ற பேருண்மையை விளக்குகின்றன. புரிந்து செயல்படுக. பிறரையும் புரிய வைத்துச் செயல்படச் செய்க.

4) அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தாவின் அருளாணை பெற்ற குருவாணையால் அருள்மிகு பச்சைமலை படபத்தர காளி சன்னிதானம், வேம்படிதாளம் இரா.சீனிவாசன் (M.Com.) அவர்கள் புதிதாக அருள்மிகு ஆத்தாள் தேவி அருளாட்சிக் கோலநாயகி பத்துத் திருக்கைகளுடன் எழுந்தருளும் குருமாரியம்மன் சன்னிதானமாக அறிவிக்கப்பட்டு நமது 'இ.ம.இ. - இ.மு.க.வின் இணைப் பொதுச் செயலாளராக' நியமனம் பெற்றுள்ளார். எனவே இவர் மின்னல் வேகத்தில் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்கிறார். தங்களுடைய மாவட்டத்தில் அவரைப் பேரார்வத்துடன் வரவேற்று; பல ஆக்கப் பணிகளை ஊக்கமுடன் செய்து வரும் தங்களை அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தாவின் திருவுளக் குறிப்பறிந்து பாராட்டுகிறார் தலைவர், குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்.

மேலும், நம்மவர்களுக்கிடையில் எவ்வளவோ ஆற்றல்கள் இருந்தும் நாம் மிகப்பெரிய அளவில் செயல்பட முடியாமல் இருப்பதற்கு **ஒரே காரணம்:- நமக்குள் ஒற்றுமையில்லை, பற்றில்லை, பாசமில்லை, நட்பில்லை, தோழமையில்லை, விட்டுக் கொடுத்துப் போகும் போக்கில்லை; பிறரை அனுசரித்துப் போகும் திறமை இல்லை; போட்டி பொறாமையற்ற**

**போக்கில்லை; தானென்ற அகம்பாவ ஆணவமற்ற நோக்கில்லை; தற்பெருமைகளையும், தற்செருக்குகளையும் யாகத்தீயில் எரித்துச் சாம்பலாக்கி விட்டு எல்லோருக்கும் தொண்டனாக பாடுபட முன்வரும் பக்குவமில்லை; இந்துவேதத்திலும், இந்துமத சாத்தர திர திறங்களிலும் புலமையும், சித்தியும் பெறும் முயற்சி இல்லை....** இப்படி நமது இல்லாமைகளையும், இயலாமைகளையும் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். எனவே, கோவை மாவட்டம் முழுவதும் மட்டுமல்ல; மேற்கு மண்டலம் முழுவதும் மட்டுமல்ல; இமயத்தின் விளிம்பு முதல் கன்னியாகுமரி கடல் மணற்பரப்பு வரை வாழுகின்ற இந்துக்களை மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், வாழ்வியல் செழுச்சியும், ஆட்சிமீட்சியும் அடையுமாறு செய்ய வேண்டும் என்ற நமது திட்டத்திற்கு உன் போன்றோர்தான் விழியாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக இருக்க வேண்டும்.

5) அன்பு மகனே! அருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானமே! சித்தரடியார் இராமசாமியே! நமக்குள் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலர் புகழாசை, அதிகார ஆசை, பதவி ஆசை, பணம் சம்பாதிக்கும் பேராசை முதலியவற்றால் நமது அருட்கோட்டங்களையும், அருட்பணி விரிவாக்கத் திட்டங்களையும் குரங்கு கைப் பூமாலையாக ஆக்கி வருகிறார்கள். இதை உன் போன்றோர் இனியும் கண்டும் காணாமல் இருக்கக் கூடாது.

**நீ தலைவன்; உனக்கு தைரியம், துணிவு, அஞ்சாமை, தவறைக் கண்டிக்கும் வீரம், எதையும் சந்திக்கும், போராடும் ஆற்றல் முதலியவை வந்தேயாக வேண்டும். இனியும் காலதாமதம் செய்யக் கூடாது. எனவே, அருளாட்சி நாயகமான தஞ்சைத் தாத்தாவின் அருளாணை பெற்ற குருவாணையாக உனக்கு இந்த அஞ்சல் மூலம் கோவை மாவட்டத்தில் முழுமையாகச் செயல்பட எல்லா அதிகாரங்களும் வழங்கப்படுகின்றன. இனியும் நம்மோடு ஒற்றுமையுடன்**


**ஒத்துழைக்கத் தயாராக இல்லாதவர்களை மதிக்கத் தேவையில்லை; நம்மோடு சேர்க்கத் தேவையில்லை; வெட்ட வெளிச்சமாக, நேரடியாக அவர்களை நமது நிறுவன நிருவாகங்களிலிருந்து விலக்கி விட்டு; நமது இ.ம.இ., இ.மு.க.விற்கு சட்டதிட்டக் கட்டுப்பாடுகளும், ஒற்றுமையும் மிகுந்த செயல்நிலைகளை உருவாக்கு. இவற்றிற்காக இ.ம.இ., இ.மு.க. உறுப்பினர்களைச் சேருங்கள். தெரு தோறும், ஊர் தோறும் கிளைகளை அமையுங்கள். சித்தர் கருவூரர் அருட்கோட்டங்களையும், சித்தர் கருவூரர் வாரவழிபாட்டு மன்றங்களையும், அருட்கோட்டங்களையும், அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களையும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கிளைச் செயலகங்களாக மாற்றுங்கள், வளருங்கள். சமுதாய அரசியல் தவறுகளையும், குறைகளையும் அகற்றவும்; அகில இந்திய அரசியலின் தலையெழுத்தை நிர்ணயிக்கவும் வல்லமை பெற்ற நமது இ.மு.க.வின் கிளை அலுவலகங்களை சித்தர் கருவூரர் படிப்பகங்கள், க.ப.சி.ம. நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், மாநாடுகள், ... முதலியவைகளின் மூலம் வடிவப்படுத்துங்கள், வாழ்வுறச் செய்யுங்கள்.**

6) மேற்படி செயல்நிலைகள் மிக விரைவில் எந்த மாவட்டத்திலும் நிகழாத அளவு கோவை மாவட்டத்தில் மிகுந்த வளத்தையும், வலிமையையும், பொலிவையும் பெற்றிட வேண்டும். அதற்காகத் தலைமைப்பீடத்திலிருந்து நீங்கள் எப்போது எழுதினாலும் உடனுக்குடன் ஈரோடு சுற்றுப்பயணத்திற்கு வருவார்கள். இதுபற்றி நமது நிருவாகக் குழுவை விரைவில் கூட்டி நல்ல முடிவுகளை எடுத்துத் தலைமைப்பீடத்திற்குத் தெரிவியுங்கள். தாங்களும் புதிய புதிய செயல்திட்டங்களை உருவாக்க வேண்டும்.


7) இன்றைய நிலையில் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்யக் கூடிய இரண்டு பேர்களுக்கு தாங்கள் புதிதாகச் செய்து வைத்துள்ளது போல் செம்புத் (குழாயில் = Copper Pipe) திரிசூலங்கள்

இரண்டு தேவை. நமது அருட்கோட்டங்களில் வசூலாகும் பணத்தின் மூலமும், இ.ம.இ., இ.மு.க.விற்கு வசூல் ஆகும் பணத்தின் மூலமும்; இந்தத் திரிசூலங்கள் செய்யும் பணத்தை எடுத்துக் கொள்ளலாம். எனவே, இரண்டு செம்புத் திரிசூலங்கள் தங்களிடம் இருப்பது போல் செய்வதற்குத் தேவையான பணத்தை யாரிடமாவது கடனுகப் பெற்ருவது உடனடியாகத் தேவையான செப்புக் குழாய் (Copper Pipe), செப்புத் தகடு (Copper Plate) வாங்கி உங்களுடைய திரிசூலம் போலவே; அதே அளவு எல்லாவற்றிலும் இருக்குமாறு செய்து அங்குச் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கும் நமது இ.ம.இ. - இ.மு.க. இணைப் பொதுச் செயலாளர் மூலம் கொடுத்தனுப்புங்கள். அவசரம், அவசியம். (தாங்கள் நம்மாழ்வாரைத் துணைக்கு வைத்துக் கொண்டு மிகச் சுறுசுறுப்பாக செய்தது போல் செய்யவும்.)

8) அருட்போரின் ஆயத்தப் பணிகளுக்காக அளப்பரிய அருளாற்றலை அண்டபேரண்ட தாத்தாக்களும், ஆத்தாக்களும், அம்மையப்பன்களும் நம்மவர்களுக்கு வழங்க ஆரம்பித்துள்ளார்கள். இவற்றை நிறைவாகவும், முழுமையாகவும் பெற்று அருட்போரில் தளபதிகளாகவும், நாயகர்களாகவும், நாயகங்களாகவும் செயல்பட்டு; உலகம் மறவாத இறவாப் புகழைப் பெற விரும்புகிறவர்கள் ஒவ்வொருவரும் தயாரிக்கும் திரிசூலம் அவரவர் உயரத்தை விட




ஒரு சாண் உயரம் அதிகமாகவும், ஒரு சாண் அகலமும் இருக்க வேண்டும்.




**குறிப்பு:-** அவரவர் உயரம் திரிசூலத்தின் தண்டும், அவரவர் கைக்கு ஒரு சாண் உயரமும், ஒரு சாண் அகலமும் உள்ள திரிசூலப் பகுதியும் அமையுமாறு ஒவ்வொருவரும் இரண்டு திரிசூலங்கள் செய்ய வேண்டும்.

9) **செயல்நிலை:** அதாவது ஒவ்வொருவரும்;

(அ) தங்கள் வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப 48 நாட்கள் (தொடர்ச்சியாக இல்லை, தொடர்ச்சியாகவும் செய்யலாம்), அதாவது வாய்ப்புக் கிடைக்கின்ற அன்றைக்கெல்லாம் பூசையில் உட்கார்ந்து பூசை செய்யலாம்.

(ஆ) என்றைக்கு எப்போது பூசை செய்ய ஓய்வு, வாய்ப்பு, வசதி, உடல்நிலை இடம் கொடுக்கின்றதோ அன்றைக்கு தலையோடு நீராடி விட்டு ஒற்றை உருத்திராக்கமாவது கழுத்தில் அணிந்து (எத்தனை உருத்திராக்க மாலை இருந்தாலும் அணிந்து கொள்ளலாம், தலைமுடியை உச்சிக் குடுமியாகத் தூக்கிக் கட்டி அதிலும் உருத்திராக்கம் சுற்றிக் கொள்ளலாம். இதற்கு சௌரி, இடுமுடி, பொய்மயிர் முதலியவைகளைப் பயன்படுத்தலாம்) இருக்க வேண்டும்.


(இ) கட்டாயமாக ஆண்களானாலும், பெண்களானாலும் குருதி வண்ணச் செவ்வாடை அணிந்து இருக்க வேண்டும்.

(ஈ) முறைப்படி நெற்றி, மார்பு, கழுத்து, கைகளில் திருநீற்றுப் பட்டைகள் போட்டுக் கொள்ள வேண்டும்.

(உ) புருவ மையத்தில் குழைத்த குங்குமத்தால் வட்டமான பொட்டும், அதற்கு மேல் நடுநெற்றியில் நெற்றிக் கண் பொட்டும், அதற்கு மேல் தலைமுடியைத் தொடுகின்ற அளவிற்கு படுக்கை வசமாக கோடு போல் குங்குமப் பொட்டும் வைத்துக் கொள்ள வேண்டும். உள்ளங்கையில் நன்றாகக் குங்குமம் பூசிக் கொள்ள

வேண்டும். பூசை அறையில் அல்லது வசதியான இடத்தில் ஒற்றைக் குத்து விளக்கு ஏற்றி குத்து விளக்கை தெற்கு நோக்கி எரிய வைத்து, தான் (பூசை செய்பவர்) அதைப் பார்த்து வடக்கு நோக்கி அமர்ந்து; அன்றுடம் கூற வேண்டிய காயந்திரி மந்தரம், காயந்திரி மந்திரம், அருட்சினே மந்திறம், கற்பூரச் சோதி வழிபாட்டு மந்தரம் ஆகிய நான்கையும் முதலில் கூறிப் பிறகு, இந்த நான்கையும் 48 முறை கூற வேண்டும். அதன்பிறகு சிவபுராணத்தைப் பாடி முடிக்க வேண்டும். இப்படி சிவபுராணத்தைப் பாடி முடித்த பிறகுதான் அண்டபேரண்ட அருட்சத்திகளேப் பெறுவதற்குரிய மோன மௌன தவத்தில் ஈடுபட வேண்டும்.

10) இந்த தவபூசையின் ஆரம்பத்திலேயே செம்பிஞல், அல்லது பித்தளே அல்லது இரும்பிஞல் செய்யப்பட்ட திரிசூலத்தை எலுமிச்சம்பழத்தை உப்புப் போட்டு தேய்த்துக் கழுவி விட்டு; விருப்பம் போல் திருநீற்றுப் பட்டையும், குங்குமப் பொட்டும் வைத்து; ஏதேனும் ஒரு வாசனேப் பூவை சிறிதளவாவது திரிசூலத்தில் சுற்றி; சூலத்தின் மேல் 3 எலுமிச்சம்பழங்களேக் குத்தி; (ஒவ்வொரு திரிசூலத்தின் நுனியிலும் ஒரு எலுமிச்சம்பழம் குத்தி); கைக்கு ஒரு திரிசூலம் பிடித்துக் கொண்டு கால் மடக்கி தவத்தில் அமர வேண்டும். இரண்டு கைகளிலும் திரிசூலத்தை நேராகப் பிடித்துக் கொள்ள வேண்டும்.



11) அமர்ந்திருக்கும் போது கண்ணை மூடியபடி தன்னுடைய அருட்பட்டங்களுக்குரிய கடவுள்களையும், குலதெய்வங்களையும், குடும்பத்தில் மாண்டு ஆண்டவர்களான முன்னோர்களையும், கிராமத் தேவர் தேவதைகளையும், தங்களுக்கு விருப்பமான கடவுள்களையும், ஒருவர் பின் ஒருவராகக் கூறி அழைத்துப் பிறகு; முறைப்படி ஆதிசிவனார் முதல் இன்றுள்ள குருதேவர் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி வரை உள்ள அனைத்து பதினெண்சித்தர் பீடாதிபதிகளையும், அவர்களுக்கு உரிய தெரிந்த அருட்பட்டங்களையும் மெல்லிய குரலில் வாய்விட்டுக் கூறி; தங்களை அருட்போரிலும், அருளாட்சியிலும் செயல்படக் கூடிய, எல்லாவகைப்பட்ட பக்குவங்களையும் பெற்றவராக உருவாக்கும்படியும் தயாரிக்கும்படியும் வேண்டிக் கொள்ள வேண்டும்.

12) இந்த தவபூசையின் போது கால்மடக்கி உட்காருவதைச் சிரமமாகக் கருதுபவர்கள் இடையிடையே எழுந்து நின்றும், மீண்டும் அமர்ந்தும் தவத்தைச் செய்யலாம். ஆனால், மூடிய கண் (ஒரு சாமம்) ஒரு யாம நேரம் வரை (2½ மணி நேரம்) மூடியே இருக்க வேண்டும்.

13) இந்தத் தவத்தில் அமருகிறவர்கள் யாராக இருந்தாலும் சரி ஒரு யாம நேரம் (ஒரு சாம நேரம்) மட்டும்தான் தவத்தைச் செய்யலாம். அதாவது **2½ மணிக்கு மேல் இதைச் செய்யக் கூடாது**. அதுவும் **இதை ஒரு நாளைக்கு ஒருமுறைதான் செய்யலாம்**. **மேற்படி சட்டதிட்டக் கட்டுப்பாடுகளை மீறியோ, மாறியோ செய்பவர்கள் எத்தகைய பாதிப்புக்களுக்கும் உள்ளாக நேரிடலாம். இது கடுமையான எச்சரிக்கை.**

**குறிப்பு:-** அதாவது தவத்தில் அமருகிறவர்கள் 2½ மணிக்குப் பின் அலாரம் அடிக்கும் கடிகாரம் அல்லது நினைவுபடுத்த யாரேனும் ஒருவரை ஏற்பாடு செய்துவிட்டுத்தான் தவத்தில் அமர வேண்டும். **எச்சரிக்கை, எச்சரிக்கை, எச்சரிக்கை**.

14) அதாவது 2½ மணிக்கு மேல் தவத்தில் உட்காரக் கூடாது என்ற விதியையும், ஒரு நாளைக்கு ஒருமுறைதான் இத் தவபூசையைச் செய்யலாம் என்ற விதியையும் மீறுகிறவர்கள் அல்லது பேரார்வத்தின் காரணமாக விதியை மாற்றிக் கொள்கிறவர்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாக நேரிடும். ஆனால், அதற்கு குருதேவரோ, பதினெண்சித்தர் மடமோ, இ.ம.இ.யோ, இ.மு.க.வோ பொறுப்பல்ல, பொறுப்பல்ல, பொறுப்பல்ல. எச்சரிக்கை. துணிந்து செயல்படுக.

15) இந்தத் தவபூசையை 1 மண்டலம், 2, 3, 4 மண்டலங்கள் வரை செய்யலாம். ஒரு மண்டலம் செய்த உடனேயே தங்களுக்கு நிறைவும், நிம்மதியும், எதிர்பார்த்த அருட்பயன்கள் கிடைத்து விட்டதாக எண்ணுகிறவர்கள் இரண்டு திரிசூலங்களையும் குருதேவரிடம் கொண்டு வந்து கொடுத்தால், ஒன்றுக்கு மட்டும் அருள் ஏற்றி உரியவரிடம் திருப்பிக் கொடுக்கப்படும். மற்றொன்று அவர் சார்பாகத் தலைமைப் பீடத்தில் இருக்கும். அதற்குப் பிறகு மேற்படித் தவ பூசையை விருப்பம் போல் கண்ணை மூடியும், திறந்தும், நினைத்த இடத்தில் அமர்ந்து விருப்பப்பட்ட திசையை நோக்கி, விருப்பம் போல் குறைந்தது 2, 3 யாம நேரம் கூட பூசை செய்யலாம். பாதிப்பு வராது. இப்படிப் பூசை செய்வதன் மூலம் அருட்போரின் ஆயத்தப் பணிகளுக்கும், அருளாட்சிப் பணிக்கும் உரிய தகுதிகளையும், பக்குவங்களையும், ஆற்றல்களையும் பெறலாம். இப்படிப்பட்டவர்களே கணிசமான அளவினராக நாடு முழுவதும் தயாரிக்கப்பட்டாக வேண்டும். இவர்களே இ.ம.இ.யையும், இ.மு.க.வையும் செயல்படுத்த முடியும்.

16) மேற்படி கருத்துக்கள் அனைத்தும்; இந்த அஞ்சலுக்குப் பல கையெழுத்து நகல்கள் எடுத்துப் பலருக்கு அனுப்பப்பட்டும்; இந்த அஞ்சலைப் பலருக்குப் படித்துக் காட்டியும், இயந்திர நகல்கள் (Xerox Copies) தயாரித்தும், விரிந்தும் விரைந்தும் செயல்படுமாறு இ.ம.இ., இ.மு.க.வின் கோவை மாவட்ட நிர்வாகக் குழு தலைவர்

அருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானம் இராமசாமி அவர்களுக்கு இன்று ஆனித் திங்கள் 8 ஆம் நாள் (22/6/92) அருளாணை பெற்ற குருவாணையாக தலைவர், குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியாரால் வழங்கப்படுகிறது.

அன்புடன்

**இந்து வேத பாடசாலை அலுவலகம்,**

வரதராசபுரம்,

அம்பத்தூர் (P.O.),

சென்னை - 53.

<u>**எழுத்தர்:**</u>

தஞ்சை ஏகாம்பர ஈசுவரர் சன்னிதானம் செ. வாசன்.

**(ஒப்பம்) அன்பு சித்தர்**
**அந்தணர் அண்ணல், ஞானுச்சாரியார்.**

உடன் இந்த அஞ்சலின்படி செயல்பட்டு பதில் எழுதவும்.

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்

<u>இயந்திர நகல் எடுப்பது:</u>

மேற்கு மண்டல இ.மு.க. தலைமையகம்,
17, கவரைத் தெரு, இராசிபுரம் - 637408.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலம்: இராசிபுரம் சித்தரடியான் திரு இர. கங்காதரக் குமார் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# குருதேவருடன் இணைந்து செயல்படுவதற்கான கட்டணம்

அம்பத்தூர்,
27-6-92.

அனுப்புதல்:-
தலைவர், குருதேவர், அந்தணர் அண்ணல்,
ஞானச்சாரியார்,
13, வரதராசபுரம்,
அம்பத்தூர், சென்னை - 600053.

பெறுநர்:-
உயர்திரு திருவருட்செல்வர் இறை அருட்பணித் திருத்தொண்டர்
க. இராசேந்திரன்,
C/O. குருசாமி ஓதுவார்,
3, சொக்கப்ப நாயக்கன் தெரு, மதுரை - 1.

ஆன்மீக நாட்டமுடைய பெருந்தகையீர்!

1) தங்களின் 26.6.92இல் எழுதிய அஞ்சலட்டை வாசகம் "**தங்கள் சேவைக்கான கட்டண விவரம் தயவு செய்து அறிவிக்கவும்**" என்ற இரத்தினச் சுருக்கமான வாசகம் நமது குவலய குருபீடம், இந்து வேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதி, இந்துமதத்தை இம்மண்ணுலகில் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதி, தமிழ் மெய்ஞ்ஞானசபைத் தலைவர், நிறையக்ஞர், பரப்பிறம்மம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் திருமுன்னர் படித்துக் காட்டப்பட்டது. அவர்கள் தங்களைப் போன்ற செயல்வீரரை எதிர்பார்த்து உள்ளார் என்பது இதன்மூலம் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

2) நமது அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இந்துவேதத்தின் முன்னூற்று தொண்ணூற்ருறு நூல்களும் (396), இந்துமதத்தின் முப்பத்தாறு (36) நூல்களும் இருக்கின்றன என்பதால் தமிழர்கள் கணிசமான அளவு இந்துமத அருளாளர்களாக, அறிஞர்களாக, மகான்களாக, ஞானிகளாக, அருள்நலம் வழங்கும் திருத்தோன்றல்களாகத் தயாராஞல்தான் குமரி முதல் இமயம் வரை உள்ள இந்துமதம் காக்கப்படும், இந்துமதம் வளர்க்கப்படும்.

3) தேவாரத் திருவாசகங்கள் ஓதுவது எப்பொழுது நிறுத்தப்பட்டது? எப்பொழுது மீண்டும் துவக்கப்பட்டது? இப்பொழுது அப்பணியின் நிலே என்ன? அடுத்து என்ன செய்ய வேண்டும்? என்ற சிந்தனேகள் இளேஞர்களுக்கிடையில் நாடு முழுவதும் பரவலாக உருவாக வேண்டும். நாற்பதிஞயிரம் (40,000) தேவாரப் பாடல்களில் சில நூறு மிஞ்சியிருக்கின்றன. பதிஞறுயிரம் (16,000) திருவாசகங்களில் சில நூறு மிஞ்சியிருக்கின்றன. சைவப் பதிகங்களும், வைணவப் பாசுரங்களும் புதையலாக வெளிக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. சிந்திக்கவும்.

4) ஆயிரமாயிரம் கோயில்களும், அவற்றில் ஆறுகாலப் பூசைகளும், ஆண்டு முழுவதும் விழாக்களும் நிகழ்ந்தும் கூட ஆயிரக்கணக்கான கல் தொலேவு கடந்து வந்து அன்னிய வேதங்களும், மதங்களும், அவை சார்ந்த கடவுள்களும் இங்கு ஆட்சி புரிய நேரிட்டது ஏன்? எதற்கு? எவ்வாறு? எப்படி?

5) 64 முறை திருவிளேயாடல் புரிய வந்த சிவபெருமான் பேசியது அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ்; 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும், பட்டினத்தாரும், தாயுமானவரும், அருணகிரியாரும், இராமலிங்க அடிகளாரும் கடவுள்களே நேரில் சந்தித்து உறவாடி, உரையாடி மகிழ்ந்திட்ட மொழி அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ்; வேதங்களேயும், சாத்திர சாத்திறங்களேயும், ஆகமங்களேயும், மீமாம்சைகளேயும் ... பெருமலா இருந்திருக்கும்? ,, ,, சிந்தித்திடுக.

அன்னிய மொழிகள், மாற்று வேதங்கள், வேற்று மதங்கள், சாதிப் பிரிவுகள், கட்சிப் பிரிவினைவாதிகள், ... முதலிய அனைத்தையும் கடந்து அருள் சார்ந்த அழைப்பு விடுத்து இந்தியாவைக் காப்போம், இந்தியாவை ஒற்றுமைப்படுத்துவோம், இந்துமத ஆட்சி மீட்போம், இந்து வேதம் வளர்ப்போம், இந்துமத வாழ்வை மறுமலர்ச்சி பெறச் செய்வோம், இந்துவேதக் கருத்துக்களையும், இந்துமத வாழ்வியல் நடைமுறைகளையும் எல்லோரும் புரிந்து கொள்ளும்படிச் செய்வோம் .... முதலிய பல குறிக்கோள்கள் மிகத் தெளிவான கொள்கைகளின் அடிப்படையில் பெற்றுத் திகழுவதுதான் இ.மு.க. (I.M.K.)

இது சமுதாய அளவிலும், சமய அளவிலும் நேரடியாக மிகப்பெரிய மாற்றங்களை ஏற்ற அளவு செய்வதற்குப் புறப்பட்டிருக்கிறது. இதற்குத் துணையாக இ.ம.இ. (I.M.I.) - இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்ற அமைப்பு முழுக்க முழுக்க மொழி, இனம், தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, பண்பாட்டுக் கலை நாகரிகக் கலாச்சாரம் (கலை + ஆச்சாரம்) ... முதலியவைகளுக்காகப் பாடுபடுவதற்காகவே உண்டாக்கப் பட்டிருக்கிறது.

6) இன்றைய நிலையில் நம் மக்கள் நமது தொன்மையான தாய்மொழி, உணர்வு, பற்று, பரிவு; இலக்கியம், இவை கூறும் உணவு, உடை, உறையுள், உறவு, உரிமை, மதம், கலை, ... முதலியன பற்றி அக்கறையோ, ஆர்வமோ இல்லாமல்; பணம், பதவி, பகட்டு, பொழுதுபோக்கு, விழாக்கோலம், அன்னிய நாட்டு நாகரிக மோகம், ... முதலியவைகளினுல்தான் நம் மக்கள் வீணுகிக் கொண்டிருக்கிறுர்கள்.

இவற்றிற்கெல்லாம் நமது அரசியல் எல்லாவகையான ஆதரவுகளையும், வசதிவாய்ப்புக்களையும், ஊக்கங்களையும், ஆற்றல்களையும், பாதுகாப்புக்களையும் வழங்கிக் கொண்டிருக்கிறது. ஏனென்றுல், எதிர்பாராத விதமாக இந்த நாட்டைச் சேர்ந்த பெரும்பாலான அரசியல்வாதிகள் குறைகளும், தவறுகளும்,

முறைகேடுகளும், அநீதிகளும், பேராசைகளும், தன்னல வெறிகளும் மிகுந்த தாக, மோக, போக, வேக வெறிகளையுடையவர்களாக இருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் தடுக்கத்தான் அல்லது திருத்தத்தான் இ.மு.க. (I.M.K.) எனும் சமுதாய அரசியல் கழகம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கழகம் ஆயிரம் கோடி ஆதவன்களால் அகற்றப்பட முடியாத அந்தகார இருளைக் கூட அகற்றும். எனவே, இதில் சேர வாருங்கள். பலரையும் சேர்த்திடுங்கள்.

7) இதற்குக் கட்டணம், அவரவரின் நெஞ்சம், சிந்தை, உணர்வு, உழைப்பு, இளமை, வாழ்க்கை, ... முதலியவைகள்தான். வருவோர் வரவேற்கப்படுவார்கள், போகிறவர்கள் வழியனுப்பப்படுகிறார்கள். புரிந்து செயல்படுக.

உடன் பதில்.

**இந்து வேத பாடசாலை**

13, வரதராசபுரம்,
இரயில் நிலையம் சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53.

<u>நகல் எழுதியவர்:-</u>

சித்தரடியான் மா. தியாகராசன் B.Sc.,
கடந்தப்பட்டி, பாச்சல் P.O., நாமக்கல் Tk.
சேலம் District.

<u>நகல் தயாரிப்பது:</u>

இந்து முன்னேற்றக் கழக மேற்கு மண்டல தலைமையகம்,
17, கவரைத் தெரு, இராசிபுரம் - 637408.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்தது.//**

ஓம்

குருவே துணை!

# அருளாட்சிக்காக அருட்போர் பணி புரிபவர்கள்

29-6-92.

அருள்மிகு சித்தரடியார் காரைக்கால் அம்மையார் திருத்தோன்றல், சந்திரா நடராசன் அவர்களுக்குத் தலைமைப்பீடத்திலிருந்து குருவாணைப்படி விடுக்கப்படும் மடல்:

தங்களுடைய 23/6/92ஆம் தேதி எழுதிய அஞ்சல் கிடைத்தது.

1) யாவும் வெற்றியாகட்டும், நலமாகட்டும்.

2) திருமதி சுப்புலட்சுமி அவர்களுடன் கோவிலுக்குச் சென்று வந்தது மகிழ்ச்சி. பாராட்டு.

3) சுப்புலட்சுமி கேட்டுக் கொண்டபடி அருளுலகப் பொருளுலகப் பாதுகாப்பு வழங்கப்படும். கவலை வேண்டாம்.

<u>குறிப்பு:-</u> அவர்களுக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் உங்களோடு வந்து அருட்பணி ஆற்றச் சொல்லுங்கள். முடியவில்லை எனில் அவரது மகள்களில் ஒருவரையாவது வந்து அ.வி.தி. பணியாற்றச் சொல்லுங்கள். அப்பொழுதுதான் அவரது வீட்டுக்காரருக்கு தெய்வீக நிலை ஏற்படுத்தித் தர இயலும். அதாவது, அவரது வீட்டிலிருந்து யாராவது ஒருவர் தினமும் உங்களை வந்து பார்க்க வேண்டும்.

4) வெங்கட்ராம ஐய்யங்காருக்காக அருள் வழங்கும் முழுப் பொறுப்பும் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. உங்களின் மூலம் அவர் காப்பாற்றப்படுவார். திரிசூலம் விரைவில் செய்து தரச் சொல்லுங்கள். பணத்தை DD எடுத்து அனுப்பவும்.

5) அருட்போரின் ஆயத்தப் பணி துவங்கி விட்டதால் காளிகள் வருகிறார்கள். கவலை வேண்டாம். உங்களுக்கு சில ஆயிரம் ரூபாய் செலவில் நவநஞ்சு (நவ பாசாணம்) கலந்த காயசித்தி, காயகல்ப மருந்து தருவதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதாவது, உங்களுடைய இந்த மனித உடம்பு அருளுலகத்துக்குரிய தெய்வீக உடம்பாக, தேவலோக உடம்பாக மாற்றப்படும். அதற்குரிய செலவில் ஒரு சிறிதளவாவது உங்களுக்குரிய பணம் செலவிடப்பட்டாக வேண்டும். ஆனால், தங்களுடைய பொருளாதார வசதியற்ற நிலை நன்கு தெரியும். எனவே, நீங்கள் உங்கள் உழைப்பால் சம்பாதிக்கக் கூடிய பணத்திலிருந்தும், தங்களுக்கு உரிமையுடைய கணவன், மகன் சம்பளத்திலிருந்தும் காயகல்பத்திற்கென்று அவ்வப்பொழுது உங்களால் இயன்ற சிறிது பணத்தைச் சேர்த்து வையுங்கள்.

இன்னும் ஒருமாத காலத்திற்குள் (சூலை முடிவுக்குள்) தங்களுடைய முழுமன நிறைவோடு காந்திமதியம்மன் நெல்லையப்பர், திருச்செந்தூர் முருகன், கன்னியாகுமரி பகவதியம்மன், சங்கரன் கோவில் கோமதியம்மன், சங்கர நாராயணர், சிவகாசி, தென்காசி, திருக்குற்றாலம், பாபநாசம், ... முதலிய கோயில்களில் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சென்று 'தங்களுடைய பழம்பிறப்பிற்கேற்ப தங்களுடைய இன்றைய இந்த உடம்பு தெய்வீக உடம்பாகத் தேவலோக உடம்பாக மாற வேண்டும்; அதற்காக நீங்கள் அருள வேண்டும்' என்று வேண்டிக் கொள்ளுங்கள்.

பிறகு காஞ்சிபுரம் வருவதற்கு முன்னால் நம் நாட்டில் உள்ள மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி என்ற

முக்கோண சத்தி பீடங்களில் மதுரை மீனாட்சியம்மன் திருமுன்னரும், காஞ்சி காமாட்சி திருமுன்னரும் தங்களுடைய வேண்டுகோளை அறிவித்து விடலாம். பிறகு காசி விசாலாட்சி திருமுன்னருக்குப் பதில் திருச்சியில் குன்றின் மீதுள்ள மட்டுவார் குழலி தாயுமானவர் முன்னிலையில் அறிவிப்புச் செய்து வேண்டுகோள் விடலாம். அதற்குப் பிறகு சிதம்பரம் சிவகாமி அம்மன் நடராசர் முன்னிலையிலும், திருவண்ணாமலையில் உண்ணாமுலை, அண்ணாமலை முன்னிலையிலும், வைத்தீசுவரன் கோயில் தையல்நாயகியிடமும் அவ்வப்போது அறிவிப்பு செய்யவும். இந்த அஞ்சலைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்.

6) 63 நாயன்மார்களில் நந்தனார் மிகப்பெரிய நெருப்புக் குண்டத்தில் இறங்கித் தன் உடலை நெருப்பாக்கித்தான் தில்லைப் பெருமான் ஆலயத்திற்குள் சென்றார். ஆனால், தாங்களோ அருளுடம்பு, தெய்வீக உடம்பு, தேவ உடம்பு பெற்று மக்களுக்கு பொதுத் தொண்டாற்றப் போகிறீர்கள்.

<u>**குறிப்பு:-**</u> அருள்மிகு காந்திமதி, நெல்லையப்பர் வாழும் திருநெல்வேலி வளாகத்தில்தான், தென்பாண்டி நாட்டில்தான் அருள்மிகு காரைக்கால் அம்மையார் அருள் உடம்பு பெற்று அருளாட்சிக்காக அருட்போர் பணி புரிவார்கள் என்று குருபாரம்பரியத்தில் செய்தி இருக்கிறது.

(அ) அதன்படிதான் அங்கு பாளையங்கோட்டையில் சண்முக சுந்தரம் நாச்சியாரும், களக்காடு பகுதியில் ஓர் அம்மையாரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(ஆ) சுப்புலட்சுமி அம்மையாரும் (பாளையங்கோட்டை) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(இ) உயர்திரு வைத்தியலிங்கம், பரமசிவம், பூவலிங்கம் என்ற முப்பெரும் சன்னிதானங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள்

வீட்டுப் பெண்களில் யாரேனும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட முடிவு செய்யப்பட்டது.

ஆனால், மேற்படி மூன்று முயற்சிகளும் பயனில்லாமல் போய்விட்டன. இறுதியில்தான் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆனால், தாங்கள்தான் இதற்கென திருத்தோற்றம் (அவதாரம்) செய்துள்ளீர்கள். தாங்கள் அருளுலக அன்பைப் பெற்று தங்களின் திருப்பாதமும், அருட்பார்வையும் பட்டுத்தான் நோயாளிகளுக்கும், பேயாளிகளுக்கும் முழுமையான பயன் தர வேண்டும்.

7) தங்களின் திருக்கையால் வாழ்த்துப் பெறுகிறவர்கள், தங்களுடைய அருட்கையால் பூசனைப் பொருள்கள் பெறுகிறவர்கள் ஏழு பிறப்புக்கும் புண்ணியம் செய்தவர்கள். எனவே, தாங்கள் தங்கள் வீட்டிலேயே காலை மாலை வசதி வாய்ப்புக்கேற்ப இரண்டு முறை நீராடி (குளித்துப்) பூசை செய்து வாருங்கள். அதாவது, அன்றுடப் பூசாமொழியில் உள்ள நான்கு காயந்திரிகளையும் (3 காயந்திரி + 1 கற்பூரச் சோதி மந்தரம்) 48 முறை ஓதியும், ஒருமுறை சிவபுராணம் பாடியும் பூசை செய்யவும். முடியாவிட்டால் ஒரு முறையாவது பூசை செய்து வாருங்கள். மற்றவை தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயல்.

**குறிப்பு:-** நம்மவர்களில் தென்பாண்டி மண்டலத்தில் நமது பழைய அடியான்கள், அடியார்கள் உலகியலுக்காகப் போட்டி பொறாமைகளால் உங்களை மதிக்காமலும், உங்களுக்கு ஒத்துழைப்புத் தராமலும் இருப்பதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவர்களை குருபாரம்பரியம் “கண்ணிருந்தும் குருடராய் வாழ்பவர்” என்று குறிக்கிறது. எனவே, யார் மீதும் கோபப்படாமல் வருபவர்களை நன்கு ஏற்றுச் செயல்படக் கூறுங்கள், வாழ்த்துங்கள்.

இந்த அஞ்சலுக்கு (Xerox) இயந்திர நகல் எடுத்துப் பிறர்க்கு காட்டுங்கள், அல்லது வழங்குங்கள். இந்த மூல அஞ்சலைப் பத்திரமாக வைத்துக் கொள்ளவும்.

**அருளாணை பெற்ற குருவாணை.**

அன்புடன்
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி,**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்,**
**தலைவர், குருதேவர், அந்தணர் அண்ணல்,**
**ஞானாச்சாரியார்.**
29-6-92.

*நகல் எழுதியவர்:-*
கடந்தப்பட்டி சித்தரடியார் மா. தியாகராசன்.

*நகல் தயாரிப்பது:*
இ.மு.க.மே.ம. தலைமையகம், இராசிபுரம்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல் கையெழுத்துப் பிறதியாக இருந்தது.//**

ஓம்

குருவே துணை

# கடவுள்களைப் பற்றிக் கூறுகின்ற ஒரே மதம் இந்துமதமே!

அம்பத்தூர்,
சென்னை - 53,
1-7-92.

பெறுதல்:

திருவருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானம்,
ஈரோடு கருப்பண்ணசாமி ஆதீனம்,
சித்தரடியார் பூசப்பன்,
L 36, பெரியார் நகர், ஈரோடு - 638101.

அருள்மிகு பழனியாண்டவர் சன்னிதானம், ஈரோடு கருப்பண்ணசாமி ஆதீனம் சித்தரடியார் பூசப்பன் அவர்கள் சமூகத்திற்கு,

1) நிறையக்ஞர், பரபிறம்மம், கருவறை மூலவர்களின் அம்மையப்பர், குவலய குருபீடம், இந்துமதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியார், குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் இறையருளை வாழ்த்தி நிறை நெஞ்சோடு வழங்கி அருளும் அருளாசியும், வாழ்த்துச் செய்தியும் இத் திருவோலை மூலம் வழங்கப்படுகிறது.

2) இன்றைய நாட்டு நடப்பில் யாரையாவது பார்த்து உன் மதம் என்ன என்று கேட்டால் பெரும்பாலும் தங்களுடைய சாதியைத்தான் சொல்லுகிறார்கள். சாதி வேறு, மதம் வேறு என்பது இன்னும் அவர்களுக்கு தெரியவில்லை.

**குறிப்பு:-** 'சாதி' என்பது ஆதியில் இல்லை. பாதியில் வந்த ஒன்றே. அதுவும் இந்த நான்காவது உகமாகிய கலியன் உகம் (கலியுகம்) பிறந்து (1359) ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்து ஒன்பது ஆண்டுகள் கழித்து இந்த இந்துவேத, இந்துமத நாடான இந்தியாவிற்குள் வந்திட்ட பிற மண்ணினரான பிரும்மணர் என்னும் வடஆரியர் சூழ்ச்சியால்தான் வடிவப்பட்டு, வாழ்வு பெற்றது. எனவே, இந்தச் சாதிகள் ஒழிக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட இந்து வேத மதமான இந்துமதம் மீண்டும் மலர்ச்சி, வளர்ச்சி, ஆட்சி பெற வேண்டும்.

3) இன்றைக்கு நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற தொண்டினைத் தங்களுடைய மதமான இந்து மதத்திற்குச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், ஏறத்தாழ எவருக்குமே இந்துமதத்தின் வரலாறு, தத்துவம், நடைமுறை, சாத்தர, சாத்திர, சாத்திறங்கள், புராண இதிகாசங்கள், ... முதலியவை தெரியவில்லை. ஏனென்றால், எல்லாரும் பிறமண்ணினரான பிருமணரின் சமசுக்கிருத மொழிக்குரிய வருணாசிரம தருமமான, போலியான "ஹிந்துமதம்" (Hinduism) பற்றித்தான் அதிகமாகத் தெரிந்திருக்கின்றனர். எனவே, இந்துமதத்துக்கும் ஹிந்துமதத்துக்கும் இடையே உள்ள வேறுபாடுகள், மோசடிகள், ஏமாற்றுக்கள், திரிபுகள், கலக்கங்கள், கறைகள், குழப்பங்கள், குறைகள், மாறுபாடுகள், முரண்பாடுகள், ... முதலியவை வெட்டவெளிச்சமாக வரையறுத்து விளக்கப்பட்டேயாக வேண்டும்.

4) பதினெண்சித்தர்களுடைய இந்துமதம், பதினெண்சித்தர்களுடைய அரிய பெரிய சாதனையாகும். எனவேதான், பதினெண்சித்தர்களுடைய தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இந்துவேதத்தின் முன்னூற்று தொண்ணூற்றாறு (396) நூல்களும், இந்துமதத்தின் முப்பத்தாறு (36) நூல்களும் இருக்கின்றன. ஆக, இந்த 432 நூல்களின் மூலம்தான்

அருளை அநுபவப் பொருளாகப் பெறலாம். 48 வகைப்பட்ட கடவுள்களையும், 48 வகைப்பட்ட வழிபடு நிலையினர்களையும் காணலாம். எல்லாவகையான பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளைப் பெறலாம். கல்லையும், புல்லையும், மண்ணையும், மணலையும், காணுகின்ற எல்லாப் பயிரினங்களையும், உயிரினங்களையும் கடவுளாகவே மாற்றலாம். மனித வாழ்வின் இன்ப துன்பங்களுக்கும், வெற்றி தோல்விகளுக்கும், இழிவுகளுக்கும், அழிவுகளுக்கும், பிறப்பு இறப்புக்களுக்கும், இழப்புக்களுக்கும், ஈட்டங்களுக்கும், ... முறையான, முழுமையான, காரண காரிய விளக்கங்களைப் பெறலாம். கைரேகை (வரியியல்), பிறப்பியல் (சாதகம்), பெயரியல், அங்கவியல், மனையியல், ... முதலிய மானுட வாழ்வியல் நுட்பங்களைக் கண்டறியும் அரிய கலைகளைப் பயிலலாம் .... என்ற பேருண்மைகளை உணருக, உணர்த்துக, உணர்ந்து உணர்த்துக, உணர்ந்து உணர்த்துக, உணர்ந்து உணர்த்துக.

5) எல்லாம் வல்ல சித்தராகிய நமது குருதேவர் உங்களுடைய முற்பிறவி, மறுபிறவி, இப்பிறவி இம்மூன்றையும் ஆராய்ந்தும்; தங்களுடைய துணைவி, செல்வியர், ... முதலியோர் நிலைகளை ஆராய்ந்தும், உங்களுக்கு மேற்கு மண்டலம் எனப்படும் சேலம், தருமபுரி, ஈரோடு, கோவை, நீலகிரி, ... முதலிய மாவட்டங்களில் விரிந்த எல்லைகளுக்குள் செயல்படும் பதவியும், பொறுப்பும் வழங்க முன்வந்துள்ளார். இதைப் புரிந்து செயல்படுக.

6) இ.ம.இ. (IMI) என்பது முழுக்க முழுக்க தனிமனித வாழ்வுக்கும், குடும்ப வாழ்வுக்கும் தொண்டாற்றக் கூடிய ஓர் ஆன்மீக நிறுவனம். இ.மு.க. (IMK) என்பது சமுதாய, அரசியல் துறைகளில் தேவையான பெரிய, உரிய, ஏற்றமிகு மாற்றங்கள் உருவாக்கும் அருளார்ந்த புரட்சி நிறுவனம். இவற்றில் எதில் வேண்டுமானாலும் நீங்கள் மேற்கு மண்டல அளவில் பொறுப்பு ஏற்றுக் கொள்ளலாம். இதற்கு,

நேரில் அடிக்கடி வந்து பயிற்சியும், வாழ்த்தும் பெற வேண்டும். உடனடியாக ஈரோட்டில் உள்ள;

திரு சௌந்தரம், அஞ்சலகத் தலைவர், 160, இராமமூர்த்தி நகர், ஈரோடு,

K. நீலகண்டன், 141500, அண்ணுநகர், டாட்டா பேட். கோவை-12.

V. பெருமாள், The New India Assurance Co. Ltd., 159-A, EVN Road, Erode.

க. பாலசுப்பிரமணியன், சந்திரன் டீக்கடை, காந்திபுரம், II Cross, பள்ளிப் பாளையம், ஈரோடு.

T.R. பிரபாகரன், 92-C, EVN Street, Peacock Mansion, Mettur Road, ஈரோடு - 2.

இந்த முகவரிகளில் உள்ளவர்களை நேரில் சென்று சந்திக்கவும். இவர்களின் துணையோடு நல்ல செயலாக்கங்களை உருவாக்கவும். அதாவது:-

(அ) ஈரோட்டிற்குள்ளும் அதன் சுற்று வட்டாரங்களிலும் பல இடங்களில் யாகசாலை வைத்து திரிசூலம் நட்டு மெய்ஞ்ஞானக் கொடியேற்றி, சித்தர் கருவூரர் அருட்கோட்டங்களை உண்டாக்கி, மந்திரித்து மக்களுக்கு அருளை மருந்தாகவும், விருந்தாகவும் வழங்கி அருட்பணி ஆற்ற வேண்டும்.

(ஆ) சித்தர் கருவூரர் வார வழிபாட்டு மன்றங்களை கோவில் வளாகங்களிலும், பொது இடங்களிலும், தனிமனித இல்லங்களிலும் தோற்றுவித்து; நமது இந்துமத இலக்கியங்கள், சாத்திர சாத்தர சாத்திறங்கள், வரலாறுகள், நடைமுறைகள் முதலியவைகளை எல்லாம் பரப்ப முற்பட வேண்டும்.

(இ) சித்தர் கருவூரர் அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்களை உண்டாக்கி; மாற்று மதங்களைக் கடுமையாக விமரிசித்து அரசியல் ஆதாயமும், தனிமனித ஆதாயமும் தேடுகின்ற கட்சிகள்,

அமைப்புக்கள் முதலிய அனைத்தையும் திருந்தும்படிச் செய்ய வேண்டும்.

(ஈ) பதினெண்சித்தர் மடத்தின் தலைமையின் கீழ் இன்றைக்கு நாட்டில் உள்ள அனைத்து வகைப்பட்ட சமய, சமுதாய, கலை, இலக்கியத் துறை நிறுவன நிருவாகங்களை எல்லாம் ஒன்றுதிரட்ட வேண்டும்.

குறிப்பு:-

i) இந்துமதத்தின் பெயரால் வாழும் நிறுவனங்களும், தலைவர்களும் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டு, முட்டி மோதிக்கொண்டு, காலத்தையும், கருத்தையும், முயற்சியையும் வீணாக்கிக் கொண்டிருக்கும் அவல, கேவல நிலைகளை அகற்ற வேண்டும்.

ii) நமது மக்களை வேற்று மொழி மந்திரவாதிகளிடமிருந்தும், மாற்று மத மந்திரவாதிகளிடமிருந்தும் விரைந்து காப்பாற்றும் பணியினை இ.ம.இ., இ.மு.க. மூலம் விரைவுபடுத்த வேண்டும். விரிவுபடுத்த வேண்டும்.

iii) நமது செயல்திட்டமான **“இந்துவேத தேவ விளக்க உரைகள்”** நாடெங்கும், குறிப்பாக மேற்கு மண்டலம் முழுவதும், சிறப்பாகப் பெரியார் மாவட்டம் முழுவதும் விரைந்து, விரிந்து நிகழ்ந்திடத் தேவையான எல்லாவகையான நிறுவன நிருவாகச் செயல்பாடுகளை முடுக்கி விட வேண்டும், துரிதப்படுத்த வேண்டும்.

7) நமது இந்துவேதத்திலும், இந்துமதத்திலும்தான் கடவுள்களின் பிறப்பு, இறப்பு, விருப்பு, வெறுப்பு, திருமணம், மகப்பேறு, போர், சமாதானம், அருள்வழங்கல், உணவு, உடை, உறையுள், அருளுலக வாழ்வியல், பூசைமுறை, மறை, நெறி, மொழி, சடங்கியல்கள் முதலிய அனைத்தும் மிகமிகத் தெளிவாகவும், நேரடியாகவும், எளிமையாகவும் விளக்கப்படுகின்றன. இவற்றின் உச்சக்கட்டமாக

கடவுள்கள் மனிதர்களைச் சந்திக்க அடிக்கடி வருவது பற்றியும் (வந்தது, வந்து கொண்டிருப்பது, வரப்போவது); மனிதர்கள் கடவுள்களைச் சந்தித்தது, சந்தித்துக் கொண்டிருப்பது, சந்திக்கப் போவது பற்றியும்; காலம், இடம் முதலிய குறிப்புக்களோடு விளக்குகின்றன. எனவேதான், நமது இந்து வேத விளக்க உரைகள் தேவ விளக்க உரைகளாகவும் பெறப்படுகின்றன.

8) இந்த உலகிலேயே கடவுள்களைப் பற்றிக் கூறுகின்ற ஒரே ஒரு மதம் நமது இந்துமதம்தான்; ஒரே ஒரு வேதம் இந்துவேதம்தான். மற்ற மதங்களும், வேதங்களும், அவற்றைத் தோற்றுவித்தவர்களும் கடவுள்களைப் பற்றிய எந்த விளக்கத்தையும் கூறவில்லை; கடவுள்களோடு அவர்களுக்கு இருந்த உறவு நிலைகளைப் பற்றி முழுமையாக விவரிக்கவில்லை. அதாவது, எந்த மதத்திலுமே கடவுள்களின் வடிவங்கள், வாழ்வியல்கள், வரலாறுகள், ... முதலியவை எள்முனையளவு கூட அழுத்தந் திருத்தமாக, ஆணித்தரமாக விளக்கப்படவில்லை.

9) எல்லா மதங்களுமே கட்டியிருக்கக் கூடிய கோயில்கள், எங்கோ இருக்கக் கூடிய தங்களுடைய கடவுளை நினைத்து வழிபடுகின்ற இடங்களாகத்தான் அறிவித்திருக்கின்றன, செயல்படுத்துகின்றன. ஆனால், நமது இந்துமதத்துக்கும், இந்துவேதத்திற்கும் உரிய கோயில்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பிட்ட காலத்தில் தோன்றிய, குறிப்பிட்ட வடிவத்தை உடைய, குறிப்பிட்ட வயதை உடைய, குறிப்பிட்ட உணவுகளையும், உடைகளையும், இசைக் கருவிகளையும், பூசைமுறைகளையும் விரும்புகின்ற கடவுள்கள் வாழ்வதாகத்தான் தெளிவான, முறையான, நிறைவான செய்திகள் வரலாறுகளாக இருக்கின்றன. அது மட்டுமல்ல நம்முடைய ஒவ்வொரு கோயிலிலும் வாழுகின்ற ***கடவுளைப் பார்த்தவர்களும், பார்த்துக் கொண்டிருப்பவர்களும்*** உலகியலாக வரலாற்றுச் செய்திகளாக வாழுகின்றன.

10) மேற்படிப் பேருண்மைகளுக்கு விளக்கமாகவும், சான்ருகவும், ஊன்ருகவும் (Explanation, Proof and Evidence) தாங்கள் விளங்க வேண்டும். இதற்காக இந்த அஞ்சலுக்கு பேளுவால் அழகான கையெழுத்திளுல் நகலே எழுதி இதற்குக் குறைந்தது 20 அல்லது 30 இயந்திர நகல்கள் (Xerox Copies) எடுத்து தலேமைப்பீடத்திற்கு 10 அனுப்புங்கள். ஈரோட்டிலும், மேற்கு மண்டலத்திலும் உள்ளவர்களுக்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ வழங்குங்கள். இதன் மூலம் உங்களுக்கு ஒரு நல்ல அறிமுகமும், புரிமுகமும் விரைவாக, விரிவாக அருளுலகிலும், பொருளுலகிலும் கிடைத்திடும். எனவே, செயல்பட வாருங்கள். வாய்ச்சொல்லில் வீரராக வாழ்ந்து விட வேண்டாம். உறங்குகின்ற அல்லது உறங்கிக் கிடக்கின்ற நம் தாயகத்து மக்களே உரக்கக் குரல் எழுப்பி விழிச்சியும், எழுச்சியும் பெறச் செய்யும் புரட்சிவீரராகச் செயல்பட முன்வாருங்கள். உங்களால் நமது அருளுலகிலும், பொருளுலகிலும் வளர்ச்சிப் பணிகள், மறுமலர்ச்சிப் பணிகள், வளவளர்ச்சிப் பணிகள், ஆட்சிமீட்சிப் பணிகள் நடைபெறட்டும்.

11) நமது இ.ம.இ., இ.மு.க. இணேப் பொதுச்செயலாளர் சித்தரடியார் இரா.சீனிவாசன் (M.Com) அவர்கள் அநேகமாக 7/7/92இல் அவசர அவசியமாக உங்களேயெல்லாம் சந்திக்க மின்னல் வேக சுற்றுப்பயணத்தை மீண்டும் துவக்குகிருர். அவரை வரவேற்றுச் செயல்படத் தயாராகுங்கள்.

வெற்றி நமதே, நாளே நமதே.

அன்புடன்

**பதினெண்சித்தர் மடம்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//**

# மாயோன் இந்து வேதம்

## முதல் காண்டம் இருக்குவேதம்

"... .... .... .... ... ... ... ...
கருக்காய் மானுடர் காக்க எழுதிய
இந்துவேதம் இம்மண்ணுலக மூலவேதம் முதல்வேதம்
முழுமைவேதம் கடவுளர்பலர் காலம்தோறும் தரும்
வேதமே இந்துவேதம் என்பதுணரல் நல்லன
எங்கும் விளைந்திட வழிபல வகுக்கும்"

"... ... ... ... ... ...
அனாதிகாலம் முதல் இருந்து வருகின்ற
இந்துவேத மூலமாய் முதலாய் உள்ளீடாய்
இருக்கின்ற வேதமே இருக்கு வேதம்"

"இம்மண்ணுலகுக்கும் முன்பே இருந்த வேதம்
இன்றைய வேதங்கள் அனைத்துக்கும் தாயாய்
இருக்கின்ற வேதம் என்றென்றும் உலகுய்ய
இருக்கப் போகின்ற வேதம் இருக்கு வேதம்"

"இருக்கு வேதத்தில் இவ்வுலகும் உலகுக்குரியனவும்
இருந்தநிலை இருக்கின்றநிலை இருக்கப் போகின்றநிலை நெருப்பாக
ஒளியிட்டுக் காட்டப்படுதல் இருக்கிறது என்பதை
எண்ணி மூலவேதமான இருக்கு வேதம் பிரிந்தே
அசுரவேதமாய் யாமவேதமாய் அதர்வானவேதமாய் என நான்காயிற்று
மனத்தின் கட்டுக்கடங்கா அசுரப்போக்கும் நோக்கும்
ஆக்கப் போக்கும் நோக்கும் பெற்றிடவே
அசுரவேதம் தனித்து வழிகாட்ட வடிவப்பட்டது
மானுடம் காக்கவும் மானுட அறிவாற்றல்
கடந்தன உணர்த்தவும் அருளுலகத் தொடர்பு
நிலையாக நிகழ்ந்திடவும் கடவுளர்வகை நாற்பத்தெட்டும்

வழிபடு நிலையினர் வகை நாற்பத்தெட்டும் பாங்குற
வாழுமிடங்கள் பக்குவமாய் கருவறையாக வெட்டவெளிக்
கருவறையாக வழிபாட்டு நிலையக் கருவறையாக
கோயில் மூலக் கருவறையாக வகைப்படுத்தி
அமைத்திடவும் நால்வகை வேண்டலும் நால்வகைப்
பூசையும் நான்மறை முறைநெறி வேதவழி
தொடர்ந்து செயலாக்கம் பெற்றுப் பயன்தரவும்
யாமவேதம் கருக்காக விழியாய் வழியாய்
வழிகாட்டியாய் வழித்துணையாய் வழிப்பயனாய் வகுக்கப்பட்டுள்ளது
அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களால் என்பது
உணர்ந்து யாமவேதம் இருள்கவின் யாமம்
ஐந்திலும் ஓதி அருள்நலம் செழித்திட
விழிப்பாய் குருவழிச் செயல்படல் வேண்டும்
என்றறிவித்தே யாமவேதம் தனித்து வடிவப்பட்டது
மானுடர் தேடி மேலுலகேழில் வாழும்
கடவுளர் வகையினரும் வழிபடுநிலையினர் வகையினரும்
மற்றுமுள பக்குவமற்ற கட்டுப்பாடற்ற ஏழுலகாளும்
இம்மண்ணுலகாரோடு கலந்து விளைக்கும் விளைவு
கண்டுணர்ந்தும் உணர்த்தியும் உலகோர் உய்ய
அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு
அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்
மண்ணுலகை அடுத்த வானத்தை ஆதாரமாகக்
கொண்டே விண் விசும்பு ஆகாயம்
ககனம் பரவெளி பால்வெளி ஏழும்
ஆளும் அதர்வான வேதம் இருக்கு வேதத்திலிருந்து
தனித்துப் பிரித்து நுண்மையாய் வடிவப்படுத்தப்பட்டது
இவ்வாறே ஒலிஒளிக்குள் ஒடுங்கும் ஐம்பூதம்
இருக்கு அசுர யாம அதர்வான வேதம்
நான்காய்ப் பகுப்புண்டு நாநிலம் காக்கிறது
நாநிலம் காக்கும் வேதம் நான்குவகை
நாநிலம் காக்கும் மறை நான்குவகை

நாநிலம் காக்கும் முறை நான்குவகை
நாநிலம் காக்கும் நெறி நான்குவகை
நாநிலம் காக்கும் சுருதி நான்குவகை
நாநிலம் காக்கும் ஆரணம் நான்குவகை
நாநிலம் காக்கும் ஆகமம் நான்குவகை
நாநிலம் காக்கும் மீமாம்சை நான்குவகை
நாநிலம் காக்கும் கட்டளை நான்குவகை
நாநிலம் காக்கும் பூசைமுறை நான்குவகை
நாநிலம் காக்கும் வேண்டல்முறை நான்குவகை
நாநிலம் காக்கும் கடவுளர் பிறப்பு (தோற்றம்) நான்குவகை
நாநிலம் காக்கும் கடவுளர் வடிவம் நான்குவகை
நாநிலம் காக்கும் உரை நான்குவகை
நாநிலம் காக்கும் கடவுளர் வாழிடம் நான்குவகை
நாநிலம் காக்கும் அருட்பயன் நான்குவகை
என்றுங்கே இருக்குவேதம் நான்கானதை ஒட்டியே
இந்துவேத இலக்கியம் நான்குவகை ஆயின
என்றறியின் இருக்குவேதமே இந்துவேத மூலம்
என்ற பேருண்மை தெற்றென விளங்கிடும்
இருக்குவேதம் இருந்தவேதம் இருக்கின்றவேதம்
இருக்கப்போகின்ற வேதம்
என்றுணர்ந்தே இருடிகள் ஓதியபடியுள்ள இருக்குவேதம்
இருடிவேதம் என்றும் பெயர் பெறுகிறது
இருக்குவேதத்தில் இருக்கிறது எல்லாமே என்பதே
கருக்கான சுருக்க நறுக்கு விளக்கம்.”

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல் தலைமைப்பீட அடியார் ஒருவரின் கையெழுத்தில் இருந்தது.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி






12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் <u>குருவாணைப்படி</u> இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

எல்லா மதங்களுமே கட்டியிருக்கக் கூடிய கோயில்கள், எங்கோ இருக்கக் கூடிய தங்களுடைய கடவுளை நினைத்து வழிபடுகின்ற இடங்களாகத்தான் அறிவித்திருக்கின்றன, செயல்படுத்துகின்றன. ஆனால், நமது இந்துமதத்துக்கும், இந்துவேதத்திற்கும் உரிய கோயில்கள் ஒவ்வொன்றிலும் வாழுகின்ற <u>கடவுளைப் பார்த்தவர்களும், பார்த்துக் கொண்டிருப்பவர்களும்</u> உலகியலாக வரலாற்றுச் செய்திகளாக வாழுகின்றன.


Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.



https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com



காணிக்கை : ரூ10/-